06.09.2022
அசல் வழக்கு எண்: 468/2010

வா.சா.5 சாட்சி சௌந்தர்யா மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் பிராது மற்றும் எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வழக்கு சங்கதிகள் பற்றி முழுவிபரம் தெரியும் என்றால் தெரியும். சர்வே எண் 14/14 யை பொறுத்து அனைத்து விபரங்களும் தெரியுமா என்றால் வருவாய்துறையில் உள்ள ஆவணங்கள் அடிப்படையில் உள்ள விபரங்கள் மட்டும் தெரியும். தாவா சொத்தை மாரியப்பன்நாயக்கர் மனைவி நாகம்மாள் என்பவர் 12.07.1943 ம் தேதியன்று பதிவு கிரையம் வாங்கிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நாகம்மாள் என்பவர் 16.06.1962 ம் தேதியன்று முத்தக்கம்மாள் என்பவருக்கு பதிவு கிரையம் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. முத்தக்கம்மாள் என்பவரும் குமரக்கால் என்பவரும் சேர்ந்து 05.05.1976 ம் தேதி பதிவு உயில் சாசனம் ஒன்று எழுதியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

சர்வே எண். 14/14 சொத்தை உயில் சாசனத்தின் அடிப்படையில் A schedule, B schedule மற்றும் C schedule ஆக பிரிக்கப்பட்டு தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. A schedule சொத்திற்கு ராமுத்தாய் பெயருக்கு பட்டா உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். ராமுத்தாய் பெயருக்கு கொடுக்கப்பட்ட பட்டாவில் சர்வே எண். 14/14 ல் 88 செண்டும் சர்வே எண். 20/10 ல் 21 செண்டும் சேர்த்து பட்டா வழங்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

தாவா சொத்து வாதிகளுக்கு சொந்தமான சொத்து என்று காட்டுவதற்கு வருவாய்துறையில் வாதிகள் தரப்பில் ஆவணங்கள் எதுவும்

தாக்கல் செய்துள்ளார்களா என்றால் ஞாபகம் இல்லை. 31.08.2000 தேதியிட்ட கிரைய ஆவணத்தை 1ம் வாதி எங்கள் அலுவலகத்தில் சமர்ப்பித்து பட்டா கேட்டு விண்ணப்பம் கொடுத்துள்ளாரா என்றால் ஞாபகம் இல்லை. 28.03.2003 தேதியிட்ட கிரைய ஆவணத்தை 2ம் வாதி எங்கள் அலுவலகத்தில் சமர்ப்பித்து பட்டா கேட்டு விண்ணப்பம் கொடுத்துள்ளாரா என்றால் ஞாபகம் இல்லை.

சர்வே எண். 14/14 சம்பந்தமாக 1ம் பிரதிவாதி மனு கொடுத்து அதன் அடிப்படையில் வருவாய்துறையில் விசாரணை எதுவும் நடைபெற்றதா என்றால் உசிலம்பட்டி வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் பட்டா மாறுதல் மேல் முறையீடு விசாரணை நடைபெற்றுள்ளது. அந்த விசாரணையில் இருதரப்பையும் முழு விசாரணைக்கு பிறகு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் தற்போது நிலுவையில் இல்லை. இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இருத்தரப்பையும் முழு விசாரணை செய்யப்பட்டார்களா என்று எனக்கு தெரியாது.

சர்வே எண் 14/14 யை எத்தனை முறை நான் பார்வையிட்டுள்ளேன் என்றால் 2 முறை பார்வையிட்டுள்ளேன். தாவா சொத்தான சர்வே எண் 14/14 ல் வாதிகள் தரப்பில் வீடு எதுவும் கட்டப்பட்டுள்ளதா என்றால் பார்வையிட்டதில் வாதிகளின் பெயரில் வீடு எதுவும் கட்டப்படவில்லை. சர்வே எண் 14/14 சம்பந்தமாக வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தற்போது வேறு எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான்.

**வாதிகள் தரப்பு மறுவிசாரணை**

சர்வே எண் 14/14 சொத்தானது சர்வே எண். 14/14 A, B, C மற்றும் D ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தற்போது Sub Division இல்லை ஆனால் முன்பு Sub Division ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே Sub Division ஆன சொத்தை கிளப் செய்து ஒரே சர்வே எண்ணாக மாற்றுவதற்கு உத்தரவு

எதுவும் உள்ளதா என்றால் சர்வே எண் 14/14 யை Sub Division செய்வதற்கு திருமங்கலம் தாசில்தார் ஏற்படுத்திய உத்தரவை உசிலம்பட்டி RDO ரத்து செய்து ஏற்கனவே இருந்த சர்வே எண். 14/14 இருந்த ராமுத்தாய் பேருக்கே பட்டா வழங்க உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவுதான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 12 என்றால் சரிதான். அந்த உத்தரவில் வாதிகள் தரப்பினர்களாக இல்லை என்றால் வழக்கு கோப்பு இல்லாததால் அவர்கள் தரப்பினர்களாக இருந்தார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது.

நான் திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியராக பணிபுரிந்தபோது தனலெட்சுமி என்பவர் திருமங்கலம் தாசில்தாராக பணிபரிந்தார் என்றால் சரிதான். தாசில்தார் தனலெட்சுமி என்பவர் மீது துறை ரீதியாக நான் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் என்றால் ந.க.எண். 18006/2009/சி3 என்ற கோப்பு வைப்பறையில் திருமங்கலம் மண்டல துணை வட்டாட்சியரால் ஒப்படைக்கவில்லை என்று RDO உத்தரவில் சொல்லப்பட்டுள்ளது. அதனால் 2020 ம் ஆண்டு இருந்த தாசில்தார் மீது துறை ரீதியா நடவடிக்கை எடுக்க தேவையில்லை. கோப்பின் அடிப்படையில்தான் உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்றாலும் இல்லாத கோப்பின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் வா.சா.ஆ 12 உத்தரவும் அதன் அடிப்படையில் வழக்கப்பட்ட பட்டாவும் செல்லுபடியாகாது என்றால் சரியல்ல.

தாசில்தாருக்குதான் பட்டா வழங்க அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். RDO வில்தான் மேல் முறையீடு செய்ய முடியும் என்றால் சரிதான். தாசில்தாரின் உத்தரவு இல்லாமல் மேல் முறையீட்டில் உத்தரவு பிறப்பிக்க முடியாது என்றால் தாசில்தாரின் கோப்புதான் இல்லை. ஆனால் பட்டாவின் அடிப்படையில் மேல் முறையீடு செய்யலாம். அது சம்பந்தப்பட்ட

ஆவணங்களின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்க முடியும்.

மேற்படி வா.சா.ஆ. 12 உத்தரவு மதுரை உயர் நீதிமன்றத்தால் தரப்பினர்களுக்கு நோட்டிஸ் அனுப்பாத காரணத்திற்காக ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் மனுதாரரான பரிமலா என்பவருக்கு வாய்ப்பு வழங்காததால் ரத்து செய்யப்பட்டு மீண்டும் வாய்ப்பு வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று ரிமாண்டு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு தரப்பினர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதா என்றால் பரிமலா, பொன்னம்மாள் மற்றும் ராமுத்தாய் ஆகியோர்களுக்கு நோட்டிஸ் அனுப்பப்பட்டுள்ளது. வாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பவில்லை என்றால் அவர்கள் ரிட் மனுவில் தரப்பினர்களாக இல்லை என்பதால் அழைப்பாணை அனுப்பப்படவில்லை. சர்வே எண் 14/14 ல் குடியிருக்கும் அனைவருக்கும் நோட்டிஸ் அனுப்பியிருக்க வேண்டும் என்றாலும் அப்படி அனுப்பாதது தவறு என்றாலும் சரியல்ல. 2014 ம் ஆண்டு யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலரை அப்போது இருந்து RDO விசாரித்து இருந்தால் தெரிந்திருக்கும் என்றால் சரிதான்.

சர்வே எண் 14/14 சொத்தானது 10 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டது என்றால் 6 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. அசல் வழக்கு எண். 153/2012 வழக்கில் நாங்கள் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். அந்த வழக்கின் பிராது மற்றும் தீர்ப்பு நகல் எவ்வாறு எங்களுக்கு கிடைத்தது என்றால் RDO விசாரணையின் போது ஆஜரான தரப்பினர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். தரப்பினர்கள் தாக்கல் செய்தார்களா அல்லது வழக்கறிஞர் தாக்கல் செய்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் கண்ட ஆறுமுகசெட்டியார் மற்றும் கோவிந்த அய்யங்கார் உயிருடன் இருக்கிறார்களா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால்

விசாரிக்கவில்லை. அவர்கள் 50 வருடங்களுக்கு முன்பாகவே இறந்துவிட்டார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் கடமையை சரியாக செய்யவில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் மாவட்ட ஆட்சியரும் திருமங்கலம் தாசில்தாரும் தரப்பினர்கள் என்றால் சரிதான். உண்மை தெரிந்துவிடும் என்பதற்காக 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரை விசாரணை செய்வதற்கு உரிமை வாதிகள் தக்க வைத்து கொள்கிறார்கள் என்றால் தற்போது உள்ள ஆட்சியருக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. ஆவணங்களின் அடிப்படையில் விசாரணை செய்ய முடியும் என்றால் சரியல்ல. உசிலம்பட்டி RDO முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.